# பக்கீர்களின் றிபாய் றாதிப் தென்கிழக்கு பக்கீர்களை மையப்படுத்திய ஆய்வு

**மு.அ.அப்துல் அபித்**
இளநிலை ஆய்வாளர் (எம்.பில்)
மொழிகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கை முஸ்லிம்களின் கலை இலக்கியப் பாரம்பரியத்தினுள் பக்கீர்களுக்குத் தனித்த இடமுண்டு. இலங்கையில் பக்கீர்கள் மிக நீண்ட காலமாக 'பக்கீர்பைத்', 'தஹறா இசை', 'றிபாய் றாதிப்' ஆகிய தமது ஆன்மீகம் சார் நிகழ் கலைகள் வாயிலாக மக்கள் தொடர்பினைப் பேணி வந்துள்ளனர். 'றாதிப்' என்பது இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஓர் ஆன்மீகக் கருமமாக தொன்று தொட்டு இருந்து வந்தாலும், பக்கீர்களின் றிபாய் றாதிபே ஒரு கலை நிகழ்வாக மக்களின் மிகுந்த கவனத்தைப் பெற்றிருக்கின்றது.புத்தளம், காலி, ஹம்பாந்தொட்ட போன்ற சில பிரதேசங்களிலும் இடம்பெற்று வரும் இந்நிகழ்வு இலங்கையின் தென்கிழக்குப் பிரதேசமான அம்பாறை மாவட்டத்திலேயே அதிகம் இடம்பெற்று வருகின்றது. கடந்த காலங்களில் தென்கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டு அடையாளங்கள் தொடர்பில் பக்கீர்களின் றிபாய் றாதிப் தொடர்பாக எத்தகைய காத்திரமான ஆய்வுகளும் இடம்பெறாத நிலையிலேயே தென்கிழக்கு வாழ் பக்கீர்களை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் பிரதான நோக்கம் றிபாய் றாதிபின் உட்கூறுகளை ஆராய்ந்து வெளிக்கொணர்தலாகும். ஆய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக தென்கிழக்கில் தற்பொழுது வாழ்ந்து வரும் பக்கீர்களுடனான நேர்காணல்கள் மூலமும்,பங்குபற்றல் சார் நேரடிக்கள அவதானம் மூலமும் பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக பக்கீர்கள் பற்றியும் அவர்களது கலைகள் பற்றியும் நூல்கள் மற்றும் இணையத் தளங்களில் வெளியான கட்டுரைக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் நிறைவில் திக்ர் சலவாத்துக்கள், தஹறா இசை, ஹாழிர் பைத், பாவலா ஆடல், குத்து வெட்டு ஆகியவற்றை றிபாய் றாதிபின் உட்கூறுகளாக இனங்காண முடிந்ததோடு,அவை பற்றிய மேலும் நுண்மையான தகவல்களை வெளிக்கொணர மு

**திறவுச் சொற்கள்:** இலங்கை முஸ்லிம்கள், றிபாய் றாதிப், தென்கிழக்கு, பக்கீர்கள்

**அறிமுகம்**

உலகின் பல பாகங்களிலும் சூ.ஃ.பித்துவ நெறியினை அடியொற்றி வாழ்ந்துவரும் சிறு சமூகக் குழுக்களாகப் பக்கீர்கள் விளங்குகின்றனர். ஆய்வாளர் ஹெச்.ஜி.ரசூல் 'பக்கீர்ஷாக்கள் எனும் கதை சொல்லிகள்' (ஜூன் 2016) என்ற கட்டுரையில் 'பக்கீர்' தொடர்பான தனது கருத்தினைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

'பக்ர்' என்ற அறபுச்சொல்லுக்கு ஏழ்மை என்று பொருள். 'பக்ர;' என்ற சொல்லிலிருந்தே பக்கீர் என்ற சொல் உருவாகியுள்ளது. மத்திய கிழக்கு, மற்றும் தெற்காசியப் பகுதியில் முஸ்லிம் சூ.ஃ.பிகளே 'பக்கீர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். இஸ்லாத்தின் அறிவியல் சிந்தனைகளைப் பரப்பும் நாடோடிகளாக அலைபாயும் இவர்களை தர்வேஷ்கள் என்று அழைப்பதுமுண்டு."

இலங்கையில் பக்கீர்களின் இருப்பு தொன்மையானது என்பதை அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் பூர்விகச் சின்னங்களான பாவா ஆதம் மலை, தப்தர் ஜெய்லானி மற்றும் பண்டைய இறைநேசர்களின் சமாதிகள் ஆகியவற்றுடன் கொண்டிருக்கின்ற தொடர்பினைக்கொண்டு உணர முடிகிறது.இவர்கள் இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டில்மிக நீண்ட காலமாக, சமய மற்றும் ஆன்மீகத்துடன் தொடர்புபட்ட, கலை இலக்கியம் சார்ந்த வகிபாகத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்கிழக்குப் பிரதேசத்தில் தற்பொழுது வாழ்ந்து வரும் பக்கீர்கள் சூ.ஃ.பி தரீக்காக்களுள் ஒன்றான றிபாய் தரீக்காவினைச் சார்ந்து இயங்கி வருகின்றனர். இவர்களின் ஆன்மீகச் செயற்பாடுகள் ‘பக்கீர் பைத்’, ‘தஹரா இசை’, ‘றிபாய் றாதிப்’ ஆகிய மூன்று நிகழ் கலைகளினூடாக இடம்பெற்று வருகின்றன. இவற்றுள் ‘தஹரா இசை’ ஏனைய இரு கலைகளுடனும் இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருக்க,‘பக்கீர் பைத்’ இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தனது சில முக்கியமான பாடுகளங்களைவிட்டு நீங்கிய நிலையில், ‘றிபாய் றாதிப்’ மாத்திரமே இடையறாது நிகழ்ந்தேறி வருகின்றது. ‘றாதிப்’ என்பது முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் ஆன்மீகச் செயற்பாடுகளுள் ஒன்றாகும். ‘A dictionary of modern written Arabic’ (1980) எனும் நவீன அறபு - ஆங்கில அகராதியானது சில மேலதிக ஆன்மீகப் பயிற்சியினைக் குறிக்கவும் ‘றாதிப்’ என்ற பதத்தைப் பயன்படுத்தியுள்ளது. இதன்படி, மிக நீண்ட காலமாக இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் வீடுகளிலும்,தர்ஹாக்களிலும், பள்ளிவாயல்களிலும் ‘றாதிப்’ஓதும் நடைமுறை இருந்து வந்துள்ளது. இலங்கையில் றிபாய் தரீக்காவைச் சேர்ந்தோர் ஆன்மீக சபைகளில் தியான உச்சாடனங்களை தஹரா இசையுடன் றாதிப் நிகழ்வாக மேற்கொண்டு வந்துள்ளனர்.றிபாய் தரீக்காவைப் பின்பற்றும் சில பிரதேசங்களில் இன்றும் இது நடைமுறையில் உள்ளது. ஆயினும்,பக்கீர் சமூகத்தினரால் தர்ஹாக்களில் கொடியேற்ற நிகழ்வுகளின்போது மேற்கொள்ளப்படும் ‘றிபாய் றாதிப்’ ஏனைய றாதிப் நிகழ்வுகளிலிருந்து மாறுபட்டதாகும். இது உள்ளூர் மற்றும் தேசிய ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் அறியப்பட்ட ஒரு கலை நிகழ்வாகும். இதில் இடம்பெறும் குத்து வெட்டு மக்களின் அதிக கவனயீர்ப்பைப் பெற்றிருந்தமையால், இது‘குத்து றாதிப்’,‘குத்துவெட்டு றாதிப்’ என்றும் அழைக்கப்படும்.

பக்கீர்களின் றிபாய் றாதிப் தென்கிழக்குப் பிரதேசத்தில் சுமார் இருநூறு வருட வரலாற்றினைக் கொண்டுள்ளது. 1823 இல் ஷாகுல் ஹமீத் அவர்களின் நினைவாகக் கட்டப்பட்டதாகக் கூறப்படும் கல்முனைக் கடற்கரைப் பள்ளியில் இன்று வரை கொடியேற்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக பக்கீர்களின் றிபாய் றாதிபுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவானதாகக் கருதப்படும் காரைத்தீவு பக்கீர் சேனைத் தைக்காஆரம்ப காலங்களில் பக்கீர்களுக்கு வழிகாட்டும் குருபீடமாகக் காணப்பட்டுள்ளதாகவும், இப்பள்ளியில் றிபாய் றாதிப் நிகழ்வு கொடியேற்றத்துடன் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததாகவும் தற்பொழுது வாழ்ந்து வரும் பக்கீர்கள் குறிப்பிடுகின்றனர். 1988 இல் ஏற்பட்ட பயங்கரவாத சம்பவங்களினால் இப்பள்ளியும், இங்கு காணப்பட்ட நூர் கலீபா, ஞானி மலங்கு ஆகிய இரு அவுலியாக்களது சமாதிகளும் (இருவரும் பக்கீர்கள்) அழிவுக்குள்ளாக்கப்பட்டன (ஜெமீல்,1997). மேலும், 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவானதாகக் கூறப்படும் தைக்கா நகர் பக்கீர் மிஸ்கீன் அலிஷா மஹ்பூப் தர்ஹாவில் 1918 முதல் றிபாய் றாத்திப் நிகழ்ச்சி இடம்பெற்று வருகின்றது. (ஜெமீல்,1997)

றிபாய் றாதிப் நிகழ்வானது இலங்கையின் பல பாகங்களிலும் அகில இலங்கை பக்கீர் ஜமாஅத்தின் கீழ் பக்கீர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்நிகழ்வு கதிர்காமம், பலாங்கொடை - தப்தர் ஜெய்லானி, அக்குரஸ்ஸ - போர்வைப் பள்ளி, புத்தளம் - கீரியங்கள்ளி பள்ளி, ஹம்பாந்தொட்ட - தர்மக்கபீர் அப்பா தர்ஹா போன்ற சமஸ்தானங்களில் இடம்பெற்று வருகின்றது. மேலும், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கடற்கரைப்பள்ளியிலும், அக்கரைப்பற்று தைக்கா நகர் பக்கீர் மிஸ்கீன் அலிஷா மஹ்பூப் தர்கா, ஷாகுல் ஹமீத் பாவா மகாம், ஜிந்தா ஷேகு மதார் தர்ஹா போன்ற இடங்களிலும், பொத்துவில் கொடிமரத்தடியிலும் கொடியேற்ற நிகழ்வுகளின் போது இரவு நேரங்களில் றிபாய் றாதிப் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கையில் உள்ள பெரும்பாலான கொடியேற்ற சமஸ்தானங்களில் அம்பாறை மாவட்ட பக்கீர்களின் பிரதான பங்களிப்புடன் இது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. றிபாய் றாதிபின் உட்கூறுகளை ஆராய்ந்து வெளிக்கொணர்தல்.
2. றிபாய் றாதிப் மேற்கொள்ளப்படும் படிமுறைகளை இனங்காணுதல்.
3. றிபாய் றாதிப் கொண்டுள்ள செயன்முறைகளின் பின்புல நம்பிக்கை சார்ந்த அம்சங்களை இனங்காணல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வுக்காகப் பனிப்பந்து மாதிரி முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் ஆரம்பத்தில் பக்கீர்கள் பற்றிய எத்தகைய முறையான தரவுகளும் காணப்படாமையினால், முதலில் ஒரு பக்கீரை இனங்கண்டு, அவரிடம் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொண்டு, ஆய்வுக்கு அவசியமான தகவல்களைப் பெறக்கூடிய ஏனைய பக்கீர்களின் விபரங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாறு ஒருவரை அணுகி, அவரிடம் தகவல்களைப் பெற்று, அவரினூடாக இன்னுமொருவரை அணுகல் என்ற அடிப்படையில் பத்து பக்கீர்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதன்படி, அம்பாறை மாவட்டத்தில் அண்ணளவாக 25 - 30 வரையிலான பக்கீர்கள் மாத்திரமே சில பிரதேசங்களில் சிதறி வாழ்ந்து வரும் செய்தியை அறிய முடிந்தது. பக்கீர்களிடமிருந்து முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள முறை சாரா நேர்காணல்களும், பங்குபற்றல் சார் கள அவதானமும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள் மற்றும் இணையதளங்களில் பதிவாகியுள்ள சில குறிப்புக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையில் றிபாய் றாதிப் குறித்து விரிவான ஆய்வுகள் தமிழ் ஆய்வுப் பரப்பினுள் இடம்பெறாத போதும், ஆய்வாளரின் தேடலுக்குட்பட்ட வகையில், 'இஸ்லாமியக்கலைகள்' (1999), கிராமத்து இதயம் (2008) ஆகிய நூல்கள் பக்கீர்களின் றிபாய் றாதிபுடன் தொடர்புபட்ட குத்துவெட்டு விளையாட்டு பற்றிய சிறுகுறிப்புக்களைத் தருவனவாக உள்ளன. அக்குறிப்புக்களும் பெரிய கருத்து மாற்றங்களின்றி ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன.

முகம்மது ஷரீப் றம்சீன் அவர்கள் 'இஸ்லாமியக் கலைகள்' எனும் நூலில் குத்துவெட்டு விளையாட்டு பற்றி பின்வரும் கருத்தினைப் பதிவு செய்துள்ளார்:

"குத்து, வெட்டு விளையாட்டென்பது மிகவும் நுட்பமான ஒரு கலையாகும். முகத்தின் ஒரு கன்னத்தில் இரும்பு ஊசியை ஏற்றி, வாய்க்குள்ளால் அதைச் செலுத்தி, மறுபக்கம் கொண்டு வருதல், மண்டைத் தோலினுள் இரும்பாணியை ஏற்றுதல், ஒரு ஆளை இரு துண்டுகளாக வெட்டுதல், பாரமான பொருட்களைக் கண்ணிமைகளில் கொழுவிக்கொண்டு வலம் வரல், நாக்கை வெளியிழுத்து அதனூடே ஊசி ஏற்றுதல் போன்ற பலவற்றைச் செய்வர். அவ்வேளை உடம்பிலிருந்து ஒரு சிறிதேனும் இரத்தம் வெளிவராது" (1999:ப.17)

இப்பதிவானது, றிபாய் றாதிபில் இடம்பெறும் குத்துவெட்டு நிகழ்வைப் பற்றி பொதுத்தளத்தில் புரியப்பட்டிருக்கும் மிகைக் கருத்தாகவே அமைந்துள்ளது. ஒரு ஆளை இரு துண்டுகளாக வெட்டுதல், பக்கீர்களின் உடம்பில் சிறிதளவும் இரத்தம் வெளிவருவதில்லை போன்ற கருத்துக்கள் நடைமுறையில் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும் அதேவேளை அவற்றை ஆய்வுக்குட்படுத்தி தெளிவு பெறவேண்டிய தேவையும் இருந்தது. றம்சீன் அவர்கள் குறிப்பிடும் கருத்தினைமிகச் சிறிய மாற்றங்களுடன் 'கிராமத்து இதயம்' என்ற நூலில் எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"குத்து, வெட்டு விளையாட்டென்பது மிகவும் நுட்பமான ஒரு கலையாகும். இது ஞானத்துடன் தொடர்புடையது. சாதாரண மக்களால் இத்தகைய காரியமொன்றில் ஈடுபடமுடியாது. முகத்தின் ஒரு கன்னத்தில் இரும்பு ஊசியை ஏற்றி, வாய்க்குள்ளால் அதைச் செலுத்தி, மறுபக்கம் கொண்டு வருதல், மண்டைத் தோலினுள் இரும்பாணியை ஏற்றுதல், பாரமான பொருட்களைக் கண்ணிமைகளில் கொழுவிக்கொண்டு வலம் வரல், நாக்கை வெளியிலிழுத்து அதனூடே ஊசி ஏற்றுதல் போன்ற பலவற்றைச் செய்வர். அவ்வேளை உடம்பிலிருந்து ஒரு சிறிதேனும் இரத்தம் வெளிவராது" (2008: ப.169).

மேற்குறிப்பட்ட நூல்களில் இடம்பெற்றுள்ள பதிவுகள் குத்துவெட்டு மேற்கொள்ளும் முறை பற்றிய மிகச் சுருக்கமான, மேலோட்டமான அறிமுகத்தை வழங்குகின்றனவே தவிர, றிபாய் றாதிபின் உட்கூறுகள் பற்றியும் அதற்குப் பின்னால் உள்ள நம்பிக்கை சார்ந்த அம்சங்கள் பற்றியும் எத்தகைய விரிவான கருத்துக்களையும் முன் வைக்கவில்லை. இத்தகைய ஆய்வு இடைவெளியினைக் கவனத்திற்கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

ஆய்விலே கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பக்கீர்களின் றிபாய் றாதிபில் உள்ள உட்கூறுகளைப் பின்வருமாறு ஒழுங்குபடுத்தி நோக்க முடியும்:

1. திக்ர் சலவாத்துக்கள் (தியான உச்சாடனங்கள்)

றாதிப் நிகழ்வின் ஆரம்பத்தில் சபையில் குத்து வெட்டு மேற்கொள்வதற்கான ஆயுதங்கள் பச்சை அல்லது சிவப்பு அல்லது வெள்ளை நிற விரிப்புக்களின் மேல் வைக்கப்பட்டு, திக்ர், சலவாத்துக்கள் இடம்பெறும். இங்கு ந.ஃப்ஸுடைய திக்ர்களை பக்கீர்கள் முதன்மைப்படுத்துகின்றனர்.

'ந.ஃப்ஸ்' என்பது ஆன்மாவை அல்லது மனதைக் குறித்து நிற்கின்றது. சூ.ஃபி உளவியல் பற்றி விளக்க முனைந்த நாகூர் ரூமிநப்ஸ் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"காமம், பேராசை, பொறாமை, குரோதம், அகந்தை போன்ற எதிர்மறைச் சிந்தனைகள் ந.ஃப்சோடு தொடர்புடையவை. இந்த ந.ஃப்ஸை சுத்தப்படுத்தி, பரிபூரண மாற்றத்திற்கு உள்ளாக்குவதே சூ.ஃ. பித்துவத்தின் அடிப்படை நோக்கம் என்பதாகவும் புரிந்து கொள்ளலாம். இதை 'தஸ்கியதுன் ந.ஃப்ஸ்', என்றும் 'தத்ஹீறுல் கல்ப்' என்றும் கூறுகின்றனர். ஒரு சூ.ஃபியின் பயணமானது ந.ஃப்ஸைத் துடைப்பதில் துவங்குகிறது"(2008:ப.90).

இதனடிப்படையில் பக்கீர்கள் றிபாய் றாதிபை ந.ஃப்ஸ்களுக்கானதிக்ர்களுடன் (தியான உச்சாடனங்களுடன்) ஆரம்பிப்பர்.நப்ஸ் அம்மாரா (ஆணையிடும் மனம்), ந.ஃப்ஸ் லவ்வாமா (தன்னைத் தானே பழித்துக் கொள்ளும் மனம்), ந.ஃப்ஸுன் முல்ஹிமா (உள்ளுணர்வு பெற்ற மனம்), ந.ஃப்ஸுன் முத்மஇன்னா (பாதுகாப்பான மனம்), நப்ஸுன் றாழியா (திருப்தியுற்ற மனம்), நப்ஸுன் மர்ழியா (இறைவனால் திருப்தி கொள்ளப்பட்ட மனம்), ந.ஃப்ஸுன் காமிலா (பரிபுரணமுற்ற மனம்) என ஏழு ந.ஃப்ஸ்களுக்குமான திக்ர்கள் ஒவ்வொன்றாக மேற்கொள்ளப்படுவதாக பக்கீர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. தஹறா இசை

றிபாய் றாத்திபில் தஹறா இசைக்கருவியின் பயன்பாடு முக்கியமானதாகும்.றாதிபின் ஆரம்ப கட்டத்தில் கலிமாவுடைய உச்சாடனத்திலிருந்து நிகழ்வின் இறுதி வரை பக்கீர்கள் குழுவாக ஒருமித்து, குறிப்பிட்ட தாள முறைகளில் தஹறாவை இசைப்பர்.

றிபாய் றாதிபின் போது தஹறாவில் பயன்படுத்தப்படும் தாளமுறை 'றாதிப் அடி' அல்லது 'றாதிப் தாளம்' எனப்படும். அந்த வகையில் ஒத்தடி, மூன்றடி, நான்கடி என்றவாறு தாளமுறைகள் பக்கீர்களால் பின்பற்றப்படுகின்றன. கலிமாவுக்காக ஒத்தடித் தாளமும், பின்னர் 'யா நபி' எனும் பாடலின்(பைத்) இறுதிப் பகுதியின் போது மூன்றடித் தாளமும்,'ஹாழிர் பைத;'(முனாஜாத்து) பாடப்படுகையில் நான்கடித்தளமும் (ஓடுதாளம்) பயன்படுத்தப்படும்.

றாதிப் மஜ்லிசில் (சபையில்) தஹறாஇசைப்பதற்கான பயற்சி வழங்கும் பண்பாடும் பக்கீர்களிடையே உள்ளது. தஹறாவைப் பயன்படுத்துவதில் நன்கு பரிச்சயமுள்ள பக்கீர்கள் நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் தனித்தோ, குழுவாகவோ இதனைக் கற்றுக்கொடுப்பார்.

3. ஹாழிர் பைத்

தஹறா இசையுடனும், சில தியான உச்சாடனங்களுடனும் றாதிபை நகர்த்திச் செல்லும் பக்கீர்கள் அஹ்மதுல் கபீர் றிபாயி, பந்தே நவாஸ் போன்ற இறை நேசர்கள் பெயரில் முனாஜாத்துக்களைப் பாடுவர். இவ்வாறு பாடப்படும் முனாஜாத்தை 'ஹாழிர் பைத;' என அழைப்பர். 'ஹாழிர்' எனும் அறபுச்

சொல்லின் பொருள் 'பங்கேற்பாளர்' அல்லது 'சமூகமளிப்பவர்' என்பதாகும். யார் பெயரில் முனாஜாத்துப் பாடப்படுகின்றதோ அவர் அந்த சபைக்கு குருக்கள் முன்னிலையில் சமூகமளித்து குத்து வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்குவார் என்பது நம்பிக்கை. இதன்போது காதிரிய்யா ஆயுதங்களின் விஷத்தன்மை நீங்கிவிடுவதோடு, சபையில் உள்ள பக்கீர்மார்கள் 'ஹாலத்துல் ஜத்ப்'எனப்படும் பரவச நிலைக்குச் சென்றுவிடுவதாகவும் கூறப்படும். பரவச நிலை என்பது உலக சிந்தனைகளிலிருந்து முழுமையாக விடுபட்டு தன்னை மறந்த நிலையினைக் குறிக்கின்றது.

'மஜ்மூஅ முனாஜாத்து' (1988) என்ற நூலில் இடம்பெறும் 'காஜா பந்தே நவாஸ் முனாஜாத்து' அம்பாறை மாவட்ட பக்கீர்கள் மத்தியில் இன்றும் புழக்கத்தில் இருந்து வருகின்றது. இதனை இயற்றியவரின் பெயரை அறிய முடியவில்லை. இந்த முனாஜாத்தினை பக்கீர்கள் றிபாய் றாத்திபின் போது (குத்துவெட்டு) மாத்திரம் ஹாழிர் பைத்தாகப் பயன்படுத்துகின்றனர். கூட்டாக சேர்ந்து பாடப்படும் இந்த முனாஜாத்தினை நூலில் உள்ளதைப் போன்று அச்சொட்டாகப் பாடாமல் பொருள் மாறாத நிலையில் ஓசை நிமித்தம் சொல் மாற்றங்களை மேற்கொண்டு பாடுவர். உதாரணமாக, பாடலின் அனைத்து இறுதி அடிகளிலும் 'ஸய்யிது' என்பதற்குப் பதிலாக 'ஹுஹாஜா'எனப் பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம்.

எடுத்துக்காட்டு :-
நூலில் பாடப்பட்டுள்ளது:

**"அஹ தான ஆலம்ஸ கீறானதில்**
**அமல் கொண்ட அல்ஹம்து லில்லாஹி நீ**
**ஷுஹுதும் ஸுஜுதும் மவ்ஜுதும் நீ**
**தொடரான ஸய்யது பந்தே நவாஸ்"**

பக்கீர்கள் பாடுவது:

**"அஹ தான ஆலம்ஸ கீறானதில்**
**அமல் கொண்ட அல்ஹம்து லில்லாஹி நீ**
**ஷுஹுதும் ஸுஜுதும் மவ்ஜுதும் நீ**
**தொடரான ஹுஹாஜா பந்தே நவாஸ்"**

மேற்குறிப்பட்ட முனாஜாத்துக்களோடு அஹ்மதுல் கபீர் றிபாய் எனும் இறைநேசர் பெயரில் பாடப்பட்ட மேலும் இரு முனாஜாத்துக்கள் றிபாய் றாத்திபின் போது குழுவாகப் பாடப்படுகின்றன. இவற்றுள் "அல்லாஹ் என்று அழைத்தவனாய்.." (பின்னிணைப்பு - ஓ) என ஆரம்பிக்கும் முனாஜாத்தின் இராகத்தினைத் தழுவியதாக நாகூர் ஈ.எம்.ஹனீபா அவர்களது "ஹஸ்பி றப்பீ ஜல்லல்லாஹ்" எனும் பாடலும்,"சாஹிபே சுல்தானே ஆலம;..." (பின்னிணைப்பு - ஔ) என ஆரம்பிக்கும் முனாஜாத்தின் இராகத்தை அடிப்டையாகக் கொண்டதாக "பரம சைனா எங்க ஊரு பக்கம் வந்து சிங்கப்பூரு..." (திரைப்படம் : பருத்தி வீரன்) எனும் பாடலும் அமைந்திருப்பது பக்கீர்களின் இசை மரபின் செல்வாக்கு மற்றும் தனித்துவத்தைக் காட்டி நிற்கின்றன.

4. பாவலா ஆடல்

றாதிப் நிகழ்வில் பாவலா ஆடலும் முக்கியமானதொரு கூறாகும். 'பாவலா' என்பதும் பரவச நிலையினைப் போன்றதே. தன்னிலை மறந்த நிலையினையே அதுவும் குறித்து நிற்கின்றது. பரவசநிலைக்குச் சென்ற பக்கீர்கள் தஹறாவினைக் கொண்டும்,குத்து வெட்டு ஆயுதங்களைக் கொண்டும் ஆடும் ஆட்டத்தைப் பாவலா ஆட்டம் எனலாம். 'ஹாழிர் பைத;' பாடலுக்கு இசைக்கப்படும் தஹறாவின் தாளத்திற்கேற்ப பாவலா ஆட்டம் இடம்பெறும். பெரும்பாலும் நான்கடித் தாளம் இடம்பெறும்போது இதனை ஆடுவர். மறைந்த நற்பிட்டிமுனை குலாம் பாவா, அக்கரைப்பற்று சைனுலாப்தீன் பாவா மற்றும் சுபைதீன் பாவா ஆகியோர் திறமையாக பாவலா ஆடக்கூடியவர்களாக விளங்கியுள்ளனர். இன்றைய நாட்களில் அமீர் பாவா, ஹிதாயதுல்லாஹ்ஷா, நூறலிஷா போன்ற பக்கீர்கள் பாவலா ஆடுவதைக் காணலாம்.

5. குத்துவெட்டு

றிபாய் றாதிப் நிகழ்வில் மேற்கொள்ளப்படும்குத்துவெட்டு என்பது மிக நுட்பமான ஒரு கலையாகும். ‘தபூஸ்’, நீளூசி (காதிரிய்யா கம்பி), கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களைக் கொண்டு பக்கீர்கள் தமது உடற்பகுதிகளில் குத்தியும் வெட்டியும் கொள்வது குத்து வெட்டு எனப்படும். இவ்வாயுதங்களைப் பொதுவாகக் காதிரிய்யா ஆயுதங்கள் என்பர்.

பாவலா ஆட்டத்தைத் தொடர்ந்தே குத்துவெட்டு இடம்பெறும். ஒரு கன்னத்தில் நீளூசியை ஏற்றி வாய்க்குள்ளால் அதைச் செலுத்தி மறு கன்னத்தினூடாகக் கொண்டுவருதல், நாக்கிலே ஊசியை ஏற்றுதல், மண்டைத் தோலினுள் கத்தி, தபூஸ் ஆகியவற்றை ஏற்றுதல், கத்தியினால் நாக்கு, நெஞ்சு, வயிறு ஆகியவற்றை வெட்டி காயத்தை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை பக்கீர்கள் மேற்கொள்வர். இவ்வாறு அவர்கள் தம்மைத் தாம் ஆயுதங்களைக்கொண்டு காயப்படுத்திய போதிலும் அவை குருக்களின் உமிழ்நீரில் ஆறிவிடுவதைக் காணலாம். இது தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற அற்புதம் (கறாமத்) எனப் பக்கீர்கள் குறிப்பிடுகின்றனர். இன்றும் அம்பாறையில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் இன, மத பேதமின்றி கொடியேற்ற நிகழ்வுகளுக்குச் சென்று, காணிக்கைகள் செய்து, பக்கீர்மார்களின் றிபாய்றாதிபினைக் கண்டு களிப்பதைக் காணலாம்.

மேற்குறிப்பட்டதகவல்களின் அடிப்படையில் றிபாய் றாதிப் இடம்பெறும் படிமுறைகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்:

1. நிகழ்வின் ஆரம்பத்தில் திக்ர், சலவாத்துக்கள் இடம்பெறும்.
2. பின்பு, கலிமாவுடைய உச்சாடனம் வரும்போது தஹரா இசை ஆரம்பித்து, றாதிப் நிறைவுறும் வரை தொடர்ந்து இசைக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.
3. தஹராவின் நான்கடித் தாளத்துடன் ‘ஹாழிர் பைத;’ ஆரம்பமாகும். தஹரா இசையைப் போலவே இதுவும் நிகழ்வின் இறுதி வரை தொடரும்.
4. ஹாழிர் பைத் ஆரம்பித்து சில கணப்பொழுதுகளில் ‘பாவலா ஆடல்’ இடம்பெறும்.
5. பாவலா ஆட்டத்தைத் தொடர்ந்து, இறுதியாக குத்துவெட்டு நிகழ்வு இடம்பெறும்.

மேலும்,திக்ர் சலவாத்துக்கள், தஹரா இசை, ஹாழிர் பைத், பாவலா ஆடல், குத்து வெட்டு ஆகியன பக்கீர்கள் மேற்கொள்ளும் றிபாய் றாத்திபின் பிரதான உட்கூறுகளாக விளங்குகின்றன. இக்கூறுகளினூடாக, றிபாய் றாதிப் பக்கீர்களின் ஓர் ஆன்மீக நிகழ்வாக மாத்திரமன்றி,மக்கள் மயப்பட்ட ஓர் ஆற்றுகைக் கலையாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

றிபாய் றாதிபின் உட்கூறுகள்,அதில் ஹாழிர் பைத், பரவச நிலையில் நிகழும் செயல்கள் போன்றவற்றிற்குப் பின்னால் தொன்றுதொட்டு வழங்கி வரும் பக்கீர்களின் அசையா நம்பிக்கை சார்ந்த அம்சங்கள்,றாதிபில் பக்கீர்கள் மத்தியில் வழங்கப்பட்டு வரும்‘ஹாழிர் பைத்’,‘பாவலா’,‘காதிரிய்யா ஆயுதம்’,‘தபூஸ்’ போன்ற பிரத்தியேகமான பெயர்கள் போன்றவற்றை ஆராய்ந்து நோக்குகையில், ஓர் தனித்துவமான பண்பாட்டுக் குழுவாக பக்கீர்களை நோக்க முடியும். அதேவேளை தென்கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலுடன் பக்கீர்களின் றிபாய் றாதிப் இணைந்திருப்பதையும் மறுக்க இயலாது.

கடந்த காலங்களில் நூல்களில் பதிவாகியுள்ள ஒரு ஆளை இரு துண்டுகளாக வெட்டுதல், பக்கீர்களின் உடம்பில் சிறிதளவும் இரத்தம் வெளிவராமை போன்ற கருத்துக்கள் ஆய்வின் முடிவில் நிராகரிப்புக்குட்பட்டன. மாறாக, பக்கீர்கள் கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களைக் கொண்டு நாக்கு, நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வெட்டிக் காயங்கள் உண்டாக்குவதை அவதானிக்க முடிந்தது.

ஆய்வுப் பயணத்திலே குத்துவெட்டு தொடர்பில் ஆன்மவியல் சார் காரணங்களை மாத்திரம் ஓரளவுக்கு அறிந்து கொள்ள முடிந்தமை ஒரு புறமிருக்க, அது மேற்கொள்ளப்படும் முறை பற்றிய நுணுக்கங்கள் மற்றும் நப்ஸுடைய திக்ர்கள் பற்றிய விளக்கங்கள் ஆகியன பக்கீர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளுடன் தொடர்புபட்டது என்பதால் அத்தகைய தகவல்களைப் பெறமுடியவில்லை. ஹாழிர் பைத்களாகப் பாடப்படும் பாடல்களுள் ‘பந்தே நவாஸ் முனாஜாத்து’ தவிர்ந்த ஏனைய

முனாஜாத்துக்கள் கடந்த கால தமிழக பக்கீர்களின் இலக்கிய உருவாக்கமாகவே அமைந்துள்ளன. மேலும்,அப்பாடல்கள் இந்திய தமிழ் சினிமாவிலும், புத்துயிர்ப்புக் கால இஸ்லாமிய இசையிலும் தாக்கம் செலுத்தியிருப்பது பக்கீர்களின் இசை மரபின் செல்வாக்கைக் காட்டி நிற்கின்றது.

இலங்கை வாழ் சிறுபான்மை சமூகங்கள் என்ற வகையில் முஸ்லிம்கள் தாம் எதிர் கொள்ளும் பூர்வீக வரலாற்றெழுதுகையுடன் தொடர்புபட்ட, பண்பாட்டு ரீதியான காலனித்துவங்களை,'றிபாய் றாதிப்' போன்ற முஸ்லிம்களின் உள்ளூர் கலைகள் மூலமாகவும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. எனவே,இலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டில் தொடர்ந்து பங்களிப்பை நல்கி வரும் பக்கீர் சமூகம் மீதுமதம் சார்ந்து, கருத்தியல் ரீதியாகப் போர் தொடுப்பதை விடுத்து,அவர்களை முஸ்லிம்களின் பாரம்பரிய கலை நிகழ்த்துகையாளர்கள் என்ற ரீதியில் நோக்கி, றிபாய் றாதிப் போன்ற கலைகளைப் பேணிப் பாதுகாப்பது,காலத்தின் தேவையாக உள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


1. அனஸ்,எம்.எஸ்.எம்., (2007),இலங்கையில் முஸ்லிம் நுண்கலை: ஒரு விமர்சன ஆய்வு, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
2. அஜ்மல்கான், பீ.மு., உவைஸ்,ம.மு., (1997), இஸ்லாமியத் தமிழ் இலக்கியவரலாறு - தொகுதி நான்கு, மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
3. ஷரீப் நம்சீன்,எம்.,(1999), இஸ்லாமியக் கலைகள், வவுனியா: மதார் உம்மா வெளியீடு.
4. ஷாகுல் ஹமீது, எம்.ஏ. (பதிப்.), (1988), மஜ்மூஅ முனாஜாத், சென்னை: ஹாஜி எம்.ஏ.ஷாகுல் ஹமீது அன்டு ஸன்ஸ்.
5. ஜெமீல்,எஸ்.எச்.எம்.(பதிப்.), (1997), அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள்,கொழும்பு: கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, முஸ்லிம் சமயகலாசார அலுவல்கள்திணைக்களம்.
6. றசூல்,ஹெச்.ஜி. (2016.தரநெ.02). 'பக்கீர்ஷாக்கள் எனும் கதை சொல்லிகள்'.(27August.2017). Retrieved from:malaigal.Com //p=8338.
7. Millton Cowan,j.(Ed.). (1980). A dictionary of Modern Written Arabic. London:Macdonald and Evans Ltd.


**நேர்காணல் மேற்கொள்ளப்பட்டோரின் விபரம்**

1. அமீர் அலிஷா பக்கீர் (சேகு இஸ்மாயீல் பாவா.∴இஸ்மாலெவ்வை அப்துல் மஜீத்), மாளிகைக்காடு, கிழக்கு - 02, (ஜனவரி 09, 2018).
2. கல்பதுல்லாஷா பக்கீர் (சுலைமான் லெவ்வை முகம்மது அமீம்),சம்மாந்துறை – 02, (ஜுன் 23, 2018)
3. திக்ருல்லாஷா பக்கீர் (நஜ்முல் ஹுசைன்டீன்), அக்கரைப்பற்று –01, (ஒக்டோபர் 10, 2017).
4. தவ்லதுல்லஷா இனாயதுல்லா பக்கீர் (நிஜாமுத்தீன் பாவா.∴ ஸைனுல் ஆப்தீன் ஹாஜா நிஜாமுத்தீன்), அக்கரைப்பற்று – 04, (டிசம்பர் 24, 2017)
5. பக்கீர் நிலைப் பெயர் : மவ்ஜூத் அலிஷா (ஜுனைதீன் பாவா.∴முகம்மது இஸ்மாயீல் ஹாஜா ஜுனைதீன்),அக்கரைப்பற்று – 15, (டிசம்பர் 05, 2018)
6. றஹ்மதுல்லாஹ்ஷா பக்கீர் (மசூர்தீன் பாவா),அட்டாளைச்சேனை– 16, (ஜனவரி 06, 2018)
7. நூறுல்லாஷா பக்கீர் (சஹாப்தீன் பாவா), பொத்துவில் - 06, (ஜுன் 23 2018).
8. முபாறக் அலிஷா பக்கீர் (முகம்மது இஸ்மாயீல் ஆதம்பாவா),அக்கரைப்பற்று –01, (ஒக்டோபர் 09, 2017)
9. ஹபீப் அலிஷா பக்கீர் (ஹுசைன் காதர் பாவா.∴சேகு அப்துல் காதர் ஆதம்பாவா), சாய்ந்தமருது - 12, (டிசம்பர் 12இ2017).
10. ஹிந்தில் அலிஷா பக்கீர் (இப்றாஹீம் பாவா.∴உதுமான் லெவ்வை இப்றாஹீம்), பொத்துவில் - 06, (ஜனவரி 04, 2018)

**பின்னிணைப்பு**

i.றிபாய் ஆண்டவர்கள் முனாஜாத்து

இயற்றியவர் : மேலைப்பாளையம் வெள்ளைக் கலீபா ஹெய்யது அஹ்மதுல்லாஷா

அல்லாஹ் என்று அழைத்தவனாய்
நல்லோர் சலவாத் சொன்னவனாய்
எல்லாம் மறந்து ஜதுபுடனே
அடிடங்கா ரிபாஇய்யா

ஆண்டவனுக்குப் பயந்தவனாய்
ஆரிபு வழியைத் துயர்ந்தவனாய்
வேண்டப் பெற்ற மனதுடனே
அடிடங்கா ரிபாஇய்யா

கலக்கம் இல்லா மனதுடனே
காமில் வழியை உகப்புடனே
வளமா வரிசை யாயிருந்து
அடிடங்கா ரிபாஇய்யா

ஆடுவதெல்லாம் அவனதுவே
பாடுவதெல்லாம் அவனதுவே
ஓடுவதெல்லாம் அவனதுவே
அடிடங்கா ரிபாஇய்யா

ஐயறிவையும் பலனாக்கி
ஐம்புலன்களையும் தானொடுக்கி
மெய்யான வழியை நோக்கி
அடிடங்கா ரிபாஇய்யா

உன்னை நீ மறந்தவனாய்
தன்னை நீ பனாவாக்கி
கண்ணில் நீ விழிப்புடனே
அடிடங்கா ரிபாஇய்யா

இருளான களை நீக்கி
பழுதான எண்ணம் போக்கி
அருளான வழியை நோக்கி
அடிடங்கா ரிபாஇய்யா

உயர்வை உனக்குத் தந்துவிடும்
உண்மை உனக்கு விளங்கி விடும்
கைறைப் பற்றிப் பிடித்தவனாய்
அடிடங்கா ரிபாஇய்யா
தவ்ஹீதினில் தரித்தவனாய்
தன்னிறைவு கொண்டவனாய்
ஹவ்பாய் நீயும் கால் மடித்து
அடிடங்கா ரிபாஇய்யா

சுத்தமான மனதுடனே
சத்தத்தோடு சவ்க்குடனே
உத்தமனை நீ காண
அடிடங்கா ரிபாஇய்யா

றிபாஈ வழியைத் துயர்ந்தவனாய்
றிபாஈ நாமம் சொன்னவனாய்
றிபாஈ பிள்ளை யாயிருந்து
அடிடங்கா ரிபாஇய்யா

நேர்வழி காட்டும் பாதை இது
நேமமாய்த் துயர்ந்தால் வழிகாட்டும்
பெயர் நாமம் சொல்லி அழைத்தவனாய்
அடிடங்கா ரிபாஇய்யா

அன்பு வைத்தால் அருள் காட்டும்
பண்பாய் துதித்தால் பலனூட்டும்
வம்பான எண்ணம் போக்கி
அடிடங்கா ரிபாஇய்யா

அச்சம் உனக்கு நீங்கி விடும்
கட்சிதமான வாழ்வளிக்கும்
அச்சம் வைத்துப் பணிவுடனே
அடிடங்கா ரிபாஇய்யா

ஏவல் தனக்கு எளிதாகும்
காவல் பாடு தந்து விடும்
ஆவல் தீர அதபுடனே
அடிடங்கா ரிபாஇய்யா

ஒளி பிறக்கும் இடத்தினிலே
பொழிவான கலை பிறக்கும்
வழியைப் பாதையைப் பின்பற்றி
அடிடங்கா ரிபாஇய்யா

நிலையில் நீயும் நின்றவனாய்
தலையை நீயும் அசைத்தவனாய்
கலையை நீயும் ஏற்படுத்தி
அடிடங்கா ரிபாஇய்யா

இருப்பாய் நீயும் இருந்து கொண்டு
பொறுப்பாய் நீயும் அறிந்து கொண்டு
விருப்பத்தை நீ ஏற்படுத்தி
அடிடங்கா ரிபாஇய்யா

துக்கம் உனக்கு நீங்கி விடும்
தக்க வாழ்வு காட்டி விடும்
ஹக்கை உன்னில் நீ காண
அடிடங்கா ரிபாஇய்யா

சங்கை நபிகள் நாதருக்கும்
சான்றோர் கியைார் அனைவருக்கும்
அங்கம் குளிர சலாமுரைத்து
அடிடங்கா ரிபாஇய்யா

ii. றிபாய் ஆண்டவர்கள் முனாஜாத்து

இயற்றியவர் :- அறிய முடியவில்லை

சாஹிபே சுல்தானே ஆலம்
செய்யதே அகமத் கபீர்
ஆசிக்கே சுல்தானுல் ஆரிபீன்
கௌசுல் அஃலம் தஸ்தகீர்

அபுல் ஹசன் அலி ஆயிஷாவின்
அன்பில் மலர்ந்த மகிபரே
கபுரில் கிடக்கும் ஜடத்துக்கும்
உயிர் கொடுத்தெழுப்பும் மகிபரே

துவக்கம் முடிவு என விளங்கும்
தூதர் நபியின் பேரரே
தவத்தில் உயர் முஹிய்யத்தீனின்
தூய வழிவந்த மகிபரே

அரிய ஞானம் அமைந்த பேர்க்கும்
அரசர் மாலிக்கல் முத்தகீன்
கருணை நபியின் இதயமாக
கலந்து விளங்கும் குதரத்தீ

தன்னில் மூன்று உலகையடக்கி
திகழும் தாஜுல் வாசிலீன்
ஜின்கள் மலக்கு மனிதர்க்கெல்லாம்
தலைமை குதுபுல் ஆலமீன்

கருவில் இருக்கும் நிலையில் அன்னை
கலக்கம் தவிர்த்த ஆரிபீன்
கடுகுக்குள்ளே கடலைப் புகுத்தி
கையில் அடக்கும் காமிலீன்

ஆரிபீன்கள் அனைத்து பேர்க்கும்
அரிய கிரீடம் நீங்களே
பாரையாளும் அரசர்க்கெல்லாம்
பீடமானவர் தாங்களே

கருணை நபியின் கபுறில் வேண்ட
கைகள் வந்தன வெளியிலே
நெருப்புக் கொழுந்தும் மங்கும் உங்கள்
நூரின் நூதன ஒளியிலே

அருமை நாமம் ஓதி ஊத
ஆடும் பாம்பும் நடுங்குமே
நரம்பில் ஓடும் விஷமும் அந்த
நிலையில் உடனே இறங்குமே

தாய்மை வழியில் தரீக்கத்தையிங்கு
தந்த எங்கள் வேந்தரே
வாய்மை அதனால் பெறவே நல்ல
வழிவகுத்த ஏந்தலே

யாரிபாஈ ஷெய்கு என்றும்
யாரும் அழைக்கத் தோன்றுவீர்
மீறிச் சூழும் துயர இருளும்
மாற விளக்கத்தைத் தூண்டுவீர்

அல்மதத்தென உதவி கோரி
அழைக்க யாவும் பணியுமே
கல்பில் நிறுத்தி கருதி விலக
கல்லும் கூடக் கனியுமே
எங்கள் தேவை எதுவென்றாலும்
ஏற்று அருள் தர வாருங்கள்
தங்கும் உங்கள் தூய திருவடி
தயவை நாளும் தாருங்கள்